CC 132/2023, 12.06.2024

**அ.சா.2 அண்ணர் (குறுக்கு விசாரணை)**

அசா1 செல்லம் எனக்கு தெரிந்தவர். இந்த வழக்கில் கண்ட சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அசா1 செல்லம் எதிரியிடம் எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தார் என்றும், எவ்வளவு தொகைக்கு கிரைய ஒப்பந்தம் போட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கடைசியாக இரத்து செய்த இரத்து பத்திரம் எந்த தேதியில் ஏற்பட்டது என்று எனக்கு நினைவில்லை. மீண்டும் புதிய ஒப்பந்த பத்திரம் எந்த தேதியில் எழுதிக்கொடுப்பதாக சொன்னார்கள் என்றால் மறுநாள் எழுதிக்கொடுப்பதாக சொன்னார்கள். புதிய ஒப்பந்த பத்திரம் எதற்காக எவ்வளவு தொகைக்கு எழுதிக்கொடுப்பதாக சொன்னார்கள் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. அசா1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**